## எரிசக்தித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

**1.** அதிகரித்து வரும் மின் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும், மின் கட்டமைப்பு மேலும் பல ஆண்டுகள் வலுவாக இருப்பதை உறுதி செய்யும் வகையிலும், சென்னையில் தலா **730 மெகாவாட் மின் உற்பத்தி திறனுள்ள இரண்டு கூட்டு சுழற்சி முறையிலான எரிவாயு சுழலி மின் நிலையங்கள், சுமார் 5 ஆயிரம் கோடி ரூபாய்** மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். முதற்கட்டமாக, இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

**2.** மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை கருத்தில் கொண்டும், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பொருட்டும் தற்பொழுது இயக்கத்தில் உள்ள **ஐந்து அனல் மின் நிலையங்களில் இருந்து வெளியேறும் கழிவுகள் மற்றும் தூசுகள் காற்றில் கலப்பதைக் கட்டுப்படுத்த, 3,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய உபகரணங்கள் நிறுவப்படும்.**

**3.** திருவண்ணாமலை மாவட்டம் **வெம்பாக்கம்,** நாமக்கல் மாவட்டம் **நல்லூர்** மற்றும் திருநெல்வேலி மாவட்டம் **நாங்குநேரி** ஆகிய **3 இடங்களில் 230 கி.வோ. புதிய துணை மின் நிலையங்கள் 510 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டு அமைக்கப்படும்.**

4. சென்னை மாவட்டம் **ஏ.ஆர்.எஸ். கார்டன்,** தஞ்சாவூர் மாவட்டம் **திருவையாறு**, விழுப்புரம் மாவட்டம் **பூத்தமேடு**, பெரம்பலூர் மாவட்டம் **கைகளத்தூர்**, கோயம்புத்தூர் மாவட்டம் **செங்கத்துறை** மற்றும் சேலம் மாவட்டம் **ஆடையூர்** ஆகிய **6 இடங்களில் இந்த ஆண்டு 110 கி.வோ. புதிய துணை மின் நிலையங்கள், 135 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

5. மின் கட்டமைப்பை வலுப்படுத்த, **380 கோடி ரூபாய்** மதிப்பீட்டில் **47 இடங்களில் புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும்.** மேலும், செயல்பாட்டில் இருக்கும் 33/11 கி.வோ. துணை

மின்நிலையங்களில்

**69 மின்மாற்றிகள் கூடுதலாகவும், திறன் உயர்த்தியும் நிறுவப்படும்.**

**6.** மின் கட்டமைப்பில் மின்னழுத்தம் சீராக இருக்கவும், சராசரி தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்பீட்டை குறைப்பதற்காகவும் **500 கோடி** ரூபாய் மதிப்பீட்டில் **50 ஊரக மின்னூட்டிகளில் உயர் மின்னழுத்த விநியோக அமைப்பு** நிறுவுவதன் மூலம் உயரழுத்தம் மற்றும் தாழ்வழுத்தத்திற்கான நீள இடைவெளி விகிதாச்சாரம் (HT/LT Ratio) குறைக்கப்படும்.

**7.** நாகப்பட்டினம், திருவாரூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் இயற்கை சீற்றங்களின் போது மின் கம்பங்கள் சாய்ந்து அதனால் மின் விநியோகம் தடையாகும் சூழ்நிலை உருவாகிறது. இந்நிலையை களைந்து சீரான மின் விநியோகத்தை உறுதி செய்ய **33 கி.வோ. துணை மின் நிலையங்களுக்கு மின்சாரம் கொண்டு செல்லும் மின் பாதைகளில் முதற்கட்டமாக சுமார் 100 கி.மீ. மின் பாதை 300 கோடி** மதிப்பீட்டில் **புதைவடங்களாக மாற்றப்படும்** என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**8.** தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் உள்ள 250 உதவி பொறியாளர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும். மேலும், இந்த நிதி ஆண்டிலிருந்து இயக்கப்படவிருக்கும் **வட சென்னை அனல் மின் நிலையம் நிலை–III-**ற்காக **150 உதவி பொறியாளர் பதவிகள் உருவாக்கப்பட்டு, நேரடி பணி நியமனம் மூலம் நிரப்பப்படும்.**

**9.** தமிழ்நாடு எரிசக்தி முகமைக்கு (TEDA) **5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு சொந்த கட்டடம் கட்டப்படும்** இது ஒரு, மாதிரி பசுமை கட்டடமாகத் திகழும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**